பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை 03.12.2019 கதிர் 28

**இனி அது ரகசியம் அல்ல!**

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அதன் தலைவர் ரணிலுக்கு எதிரான எதிர்ப்பலைகள் சூடுபிடித்து வருகின்றன என்பது உள்வீட்டுத் தகவல். அது எல்லோருக்கும் தெரிந்ததும்தான். இருபத்தியைந்து வருடங்கள் கட்சியின் தலை பக்கம் 02

## இரு வாரங்களுள் புதிய கட்சி ஆரம்பிக்கின்றார் சிறிகாந்தா!

### நேற்று அவர் பகிரங்க அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 03

அடுத்த இரண்டு வாரங்களில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ரெலோவின் முன்னாள் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என். சிறிகாந்தா நேற்று அறிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் – பக்கம் 02



# வடக்கு – கிழக்கில் இப்போதும் நாமே பெரும்பான்மையினர்!

## கோட்டாபயவுக்கு விக்னேஸ்வரன் பதிலடி



யாழ்ப்பாணம், டிசெம்பர் 03

வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள். சிங்கள மொழி நடைமுறைக்கு வந்தது கி.பி 6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டில், அதற்கு முன்னர் சிங்கள மொழிபேசுவோர் இலங்கையில் இருந்ததில்லை. வடக்கு – கிழக்கில் இன்றும் நாமே பெரும்பான்மையினர். பின் எவ்வாறு சிங்களப் பெரும்பான்மையினர் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்ய முடியாது என்று எமது ஜனாதிபதி கூறலாம்?

– இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். பக்கம் 03

## யாழ். இளைஞர்கள் இருவர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, டிசெ. 03

அல்பேனியாவுக்கு செல்ல முயன்ற, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குடிவரவு – குடிய பக்கம் 03

## மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு பலரின் பெயர்கள் பரிந்துரைப்பு

கொழும்பு, டிசெ. 03

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி எதிர்வரும் 20ஆம் திகதியுடன் பதவி விலகவுள்ள நிலையில் பக்கம் 02

## கனடா செல்லவிருந்த பெண் விபத்தில் சாவு!

வவுனியா, டிசெ. 03

கனடா செல்வது குறித்து உறவினர்களுக்குத் தகவல் சொல்லிவிட்டு திரும்பிக்கொண்டிருந்த பெண் ஒருவர் வவுனியா, ஓமந்தையில் நடந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். பக்கம் 03

## பாகிஸ்தான் அமைச்சர் நேற்று கோட்டாவுடன் முக்கிய பேச்சு



கொழும்பு, டிசெ. 03

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் சந்தித்து பரஸ்பர பக்கம் 03

## நாடாளுமன்றத்தை ஜனவரி 3 இல் கூட்டுவதற்கு கோட்டாபய உத்தரவு



கொழும்பு, டிசெ. 03

நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு நேற்றிரவு வெளியிடப்பட்டது. அதன்படி நேற்று இடம்பெறவிருந்த நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதியின் கட்டளைக்கு பக்கம் 02

## எவ்.சி.ஐடியை சி.ஐ.டியுடன் இணைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 03

பெரும் நிதி மோடிகள் விசாரணைப் பிரிவு (எவ்.சி.ஐ.டி) குற்ற விசாரணைத் திணைக்களத்துடன் இணைக்கப்படுவதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பக்கம் 03

## யாழ். பல்கலையில் புதிய பீடமாக துணை மருத்துவ விஞ்ஞான பீடம்

### பதில் பீடாதிபதியாக தெய்வி தபோதரன்



யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை மருத்துவ விஞ்ஞான பீடத்துக்குப் பதில் பீடாதிபதியாக தெய்வி தபோதரன் நியமனம் செய் பக்கம் 02

## பொய் சொல்கின்றார் சுவிற்சர்லாந்து தூதுவர்

### திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 03

தமது தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டார் எனச் சுவிற்சர்லாந்து தூதுவர் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை எனவெளிவிவகார அமைச்சு மற்றும் பாது பக்கம் 03


## சுவிஸ் தூதரகப் பணியாளரை விசாரிக்க நீதிமன்றின் அனுமதியைக் கோர முயற்சி

கொழும்பு, டிசெ. 03

அச்சுறுத்தலுக்கு உள்ளானதாகச் சொல்லப்படும் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதரகத்தின் பெண் பணியாளர் இதுவரை சம்பவம் குறித்து சாட்சியமளிக்க முன்வராத நிலையில், நீதிமன்ற அனுமதியைப் பெற்று அவரிடம் விசாரணை நடத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுவிஸ் தூதரகம் பக்கம் 02

# பிரிந்தார் வேதா



யாழ்ப்பாணம், டிசெ.03

வடமராட்சியைச் சேர்ந்த பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகி வேதா காலமானார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட டி.எம். வேதாபரணம் (வயது 75) நேற்றுக் காலை கொழும்பில் இருதயத் தாக்குக்கு இலக்காகி, டேர்டர்ன்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் காலமானார்.

அவர்வடக்குரசிகர்களால் மெச்சப்பட்ட ஓர் உதைபந்தாட்ட மத்தியஸ்தர். கிரிக்கெட் நடுவர். உதைபந்தாட்டப் பயிற்சியாளர். விளையாட்டுத்துறை நிர்வாகி.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரான அவர் பாடசாலை நாள்களில் கிரிக்கெட்டிலும் உதைபந்தாட்டத்திலும் மெச்சப்பட்ட முன்னணி வீரர். வடமராட்சி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முடிசூடா மன்னன்.

இரண்டு, மூன்று தாசாப்தங்கள் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து முழுமையாகச் செயற்பட்ட அவர் 2013 இல் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கை உருவாக்கி, அதன் ஸ்தாபகத் தலைவராகி இதுவரை அதனை செவ்வனே நிர்வகித்து வந்தவர்.

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மைதானங்களை அரை நூற்றாண்டுகளுக்கு மேல் அலங்கரித்த மிகத் திறமையான கிரிக்கெட் நடுவர் அவர்.

அவரது பூதவுடல் இன்று வதிரிக்கு எடுத்துவரப்படுகின்றது.

லண்டனில வதியும் தனது மூன்று பிள்ளைகளையும மற்றும் மனைவியையும் விட்டுப் பிரிந்துள்ள வோதாபரணத்தின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய இடம்பெறாது.

ஜனாதிபதியின் கட்டளைக் கமைய அடுத்த நாடாளுமன்ற அமர்வு 2020 ஜனவரி மாதம் 3ஆம்திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாடாளுமன்ற அமர்வு ஆரம்ப உரையை நிகழ்த்துவார்.

அத்துடன், அடுத்த நாடாளுமன்றஅமர்வின்பின்னர்நாடாளுமன்றக் குழுக்கள் தெரிவு மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன அனைத்துக்கட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியதகவல்களின்அடிப்படையில் சம்பவம் நடந்த தினத்தில் வீதியோர சி.சி.ரி.வி. கமராக்களை பரிசீலனைக்குட்படுத்திய பொலிஸார்,சுவிஸ் தூதரகப் பணியாளர் வாடகை வாகனம் போன்ற ஒன்றில் ஏறி பம்பலப்பிட்டி வரை பயணித்துள்ளார் எனக் கண்டறிந்துள்ளனர்.

தூதரகப் பணியாளரின் வீடு மருதானைப் பகுதியில் இருப்பதால் அவர் பம்பலப்பிட்டிக்குத் தனிப்பட்ட தேவைக்காகச் சென்றாரா அல்லது தனிப்பட்ட பிரச்சினையால் ஏற்பட்ட சம்பவமா இதுஎன்பது குறித்து பலகோணங்களில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

பணியாளரை வாக்குமூலம் வழங்கத்தூதரகம் அனுமதி மறுப்பதால் நீதிமன்ற உத்தரவை ஒன்றைப் பெற்று அவரிடம் விசாரணை நடத்த யோசனை செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர்ப் பணியாளர் என்பதால் இராஜதந்திரச் சிறப்புரிமைகளை தாண்டி நீதிமன்ற அனுமதியுடன் அவரிடம் வாக்குமூலம் பெறலாமெனப் பாதுகாப்புத் தரப்பில் கருதப்படுகிறது.

உடல் ரீதியாக அவர் துன்புறுத்தப்பட்டுள்ளார் எனச் சொல்லப்படுவதால் அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடந்த விசாரணைகள் குறித்து விரிவான விவரங்களை பாதுகாப்புத் துறை வெளியிடத் தயாராகி வருவதாகவும் மேலும் அறிய முடிந்தது. (ஐ)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளார்.

உடனடியாகச்செயற்பாட்டுக்கு வரும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மருத்துவ பீடத்தின் கீழ் அலகாக இயங்கி வந்த துணை மருத்துவ விஞ்ஞான அலகு நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் சிறப்பு வர்த்தமானி மூலமாகக் கடந்த மாதம் முதல் துணை மருத்துவ விஞ்ஞான பீடமாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

இதன்மூலம் யாழ். பல்கலைக் கழகத்தின் பன்னிரெண்டாவது பீடமாகத் துணை மருத்துவ விஞ்ஞான பீடம் உருவாகிறது.

துணை மருத்துவ அலகின் இணைப்பாளராகப் பதவி வகித்த முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் பெயர் பதில் பீடாதிபதிக்காகப் பரிந்துரை செய்யப்பட்ட போதிலும் தன்னால் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் மறுத்ததன் காரணமாக மூப்பின் அடிப்படையில் தெய்விதபோதரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும், பட்டமளிப்பு விழா நெருங்கிவரும் நிலையில் - பட்டமளிப்பு விழாவில் பீடாதிபதிகள் முன்னிலையாக வேண்டிய காரணத்துக்காக பேரவையின் அங்கீகாரமின்றி மிக அவசரமாக இந்த நியமனம் வழங்கப்படுகின்றது எனத் துணை மருத்துவ விஞ்ஞான பீட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-07)

## இரு வாரங்களுள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ரெலோ எடுத்த முடிவுக்கு மாறாக யாழ் மாவட்டக் கிளை பொது வேட்பாளராக களமிறங்கிய எம்.கே.சிவாஜிலிங்கத்தை ஆதரிப்பதாக முடிவெடுத்தது. அதன்படி அவருக்காக தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபட்டது.

இதனையடுத்து ரெலோவின் தலைமை குழு திருகோணமலையில் கூடி எம் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் செயலாளர் நாயகம் பதவியில் இருந்த என்னையும் அதில் இருந்து நீக்குவதாகவும் முக்கிய சில பதவிகளில் இருந்த ஏனையவர்களும் அதிலிருந்து விலக்கப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தென்னிலங்கைக் கட்சிகளின் இரு பிரதான வேட்பாளர்களும் 5 தமிழ்க் கடசிகள் ஒன்றிணைந்து தயாரித்த 13 அம்சக் கோரிக்கைகளைத் தொட்டுக் கூட பார்க்கமாட்டோம் எனக் கூறினார்கள். இவ்வாறான நிலையில் வவுனியாவில் திடீரெனக் கூடிய தமிழரசுக் கட்சியின் செயற் குழு எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக தீர்மானித்தது. இதே முடிவை ரெலோ தலைமைக் குழுவிலும் பல எதிர்ப்புக்கு மத்தியில் தீர்மானமாக எடுக்கப்பட்டது.

இதன் பின்னரே நாம் பொது வேட்பாளராகக் களமிறங்கிய சிவாஜிலிங்கத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட கிளை ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றி அவருக்காகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டோம். நீண்ட காலமாக தமிழரசுக் கட்சியின் எடுபிடியாக செயற்பட்டு வரும் ரெலோவுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது எனப் பலர் தீர்மானித்துள்ளனர்.

குறிப்பாக ரெலோவில் உள்ள 80வீதமானவர்கள் அதில் இருந்து விலகதீர்மானித்துள்ளனர். எனவே நாம் ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களின் நலனுக்காகச் செயற்பட புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்துப் பயணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

நாம் ஆரம்பிக்கவுள்ள கட்சியின்பெயர், கொள்கைகள் போன்ற விவரங்கள் மிக விரைவில் அறிவிக்கப்படும். நாம் ஆரம்பிக்கவுள்ள கட்சியில் தமிழரசுக் கட்சி தவிர்ந்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து பயணிக்கலாம். நாமும் நல்லதொரு நேர்மையான தலைமைகளுடன் பயணிக்கத் தயாராக இருக்கின்றோம்.

எமது இந்தப் புதிய முயற்சிக்கு வடக்கு - கிழக்கில் முழுமையான ஆதரவு கிடைத்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பிரதேசங்களில் இருந்து இப்போதே ஆதரவுகள் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கடசியின் ஒரு கிளையாகவே தமிழரசுக் கட்சி செயற்பட்டு வருகின்றது. இவ்வாறானவர்களை எங்கே அனுப்ப வேண்டுமோ அங்கே மக்கள் விரைவில் அனுப்புவார்கள். கோட்டாவை தோற்கடிக்க வேண்டும் எனப் பிரகடனம் செய்தவர்கள் இப்போது அதே கோட்டாபயவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றனர்.

இவர்களுக்கு வெட்கம், மானம் இல்லையா? போர் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமெல்லமெல்லதமிழரசின் சர்வாதிகாரப் போக்குக்குள் சிக்கியுள்ளது. இதற்கு நாம் தொடர்ந்தும் துணைபோக முடியாது. அவர்களின் எடுபிடிகளாக நாம் இனியும் செயற்பட முடியாது. எனவேதான் புதிய கட்சியை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். இதில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் இணைந்து பயணிக்க முடியும் என நம்புகின்றோம் - என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்துவத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கட்சியைப் பெரும்பாலும் எதிர்க்கட்சி வரிசையில அமர வைத்தமைதான் அவரது சாதனை என்று கட்சிகாரர்களே தொண தொணக்கத் தொடங்கி விட்டார்கள்.

'தோற்றுப் போன தலைவர்' என்ற பெயருடன் ரணில் விக்கிரமசிங்க வீட்டுக்கு நடையைக் கட்டுவதில பிறருக்கு - குறிப்பாகத் தமிழருக்கு - ஒரு பிரச்சினையுமில்லை என்பதுதான் பொதுவான கருத்து. ஆனால் அது அப்படியல்ல என்பதே உண்மையான நிலைமையாகும்.

2001 இல் விடுதலைப் புலிகளுடன் சமரச உறவு கொள்ளத் தொடங்கிய காலத்தில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மையினருக்கு - குறிப்பாகத் தமிழர்களுக்கு - எதிராகப் பேரினவாதப் போக்கில் செல்லாமல் பார்த்துக் கொண்டவர் ரணில். 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச நடவடிக்கையினால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகும் வாய்ப்புத் தட்டிப் பறிக்கப்பட்ட போதும் கூட அவர் இனவாதப் பூச்சாண்டியைக் கையில் எடுத்தாரில்லை.

அவரிலும், அவரது கட்சியிலும் சிங்கள, பௌத்த பேரினவாத சாயல் ஆழமாகப் புதைந்திருந்தபோதிலும் அதை ஒரு கருவியாக தமது அரசியலுக்கு இக்காலகட்டத்தில் அவர் எடுத்தாரில்லை. தமது கட்சியையும் அந்தப் போக்குக்குப் போகவிடாமல் அவர் பார்த்துக்கொண்டார். எப்போதும்தாமும்தமது கட்சியும் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும மலையகத் தமிழரையும் இனவாதமாகப் பார்க்காமல் அரவணைக்கின்றமையை அவர் உறுதி செய்தார்.

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும்கூட, இதற்கு மாறான போக்கைக் கடைப்பிடித்த - சிறுபான்மையினரை வெறுத்து ஒதுக்கிபௌத்த - சிங்களப்பேரினவாதச் சிந்தனையில் ஒற்றைப் பிடியாய் நின்ற தரப்பு பெருவெற்றியீட்டியிருக்கின்றது.

ஒருபுறம் சிறுபான்மையினருடன் எப்போதும் சமரசம் செய்யும் பண்பியல்பை வெளிப்படுத்திய ரணிலின் தலைமைக்கு தொடர்ந்து பெரும் தோல்வி.

மறுபுறம் பௌத்த - சிங்கள பேரினவாதத்தைத் தலையில் தூக்கி வைத்துக் குதித்த பொதுஜன பெரமுனவுக்கு அசைக்கவே முடியாத பெரும் வெற்றி.

இந்தப் பின்புலத்தில்தான் ஐ.தே.கட்சியின் தலைமை மற்றும் எதிர்க்கட்சிக்குத் தலைவர் பதவிகளில் இருந்தெல்லாம் ரணிலைப்புரட்டிப்போடும்முயற்சி சூடுபிடித்திருக்கின்றது.

காலம் காலமாக - கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாக - சிறுபான்மையினருடன் எப்போதும் சமரசப்போக்கைக் கைக்கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்கவே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் படுதோல்விக்குப் பின்னர், தமது கட்சி பௌத்த, சிங்கள வாக்குகளைத் தொலைத்தமை எங்ஙனம் என்பது குறித்து கவனமாக ஆராயவேண்டியிருக்கின்றது எனக் கூறியிருக்கின்றார்.

இச்சூழலில்தான் ரணிலை அகற்றி புதிய தலைமை கட்சிக்கு வரப்போகின்றது. அந்த மாற்றம் வெறுத் தலைவர் மாற்றமாக - தலைமைத்துவ மாற்றமாக - இருக்காது என்று முன்னெச்சரிக்கை விடுகின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வருவோம் எனப் பேரினவாத எழுச்சியைக் கிளப்பி அதன் மூலம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆட்சியைப் பிடித்தார் என்றால், மறுபுறத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்காக பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, பேரினவாத எழுச்சியை ஏற்படுத்தும் விதத்தில் கண்டி யாத்திரை நடத்தினார் ஐ.தே.கட்சியின் ஜே.ஆர். ஜெயவர்தன.

இதுதான் சிங்களத்தின் பரவணிப் பண்பியல்பு. ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு - பெரும்பான்மையினரான பௌத்த, சிங்கள மக்களின் வாக்கு வங்கியைச்சுரண்டி கபளீகரம் பண்ணுவதற்கு - பௌத்த, சிங்களப் பேரினவாதப் பூதத்தைக் கிளப்புவது தான் அந்த வழிமுறை.

நேற்று வரை அந்த வழிமுறையே - அந்த வழிமுறை மட்டுமே - மாறி, மாறி வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றது.

அதுதான் இப்போது ஐ.தே. கட்சியிலும் நடக்கப் போகின்றது என்று எச்சரிக்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இனி, ஐ.தே.வுக்குள் நடக்கப் போவது வெறுமனே தலைமைத்துவ மாற்றம் மட்டுமல்ல. அதனையும் தாண்டி ஒரு கொள்கைப் போக்குத் தலைகீழ் மாற்றமும் சேர்ந்தே நடக்கப்போகின்றது.

பேரினவாதத்தைக் கையில் எடுக்கப் போகின்ற ஐ.தே.கட்சியின் புதிய தலைமைத்துவம், அந்த விடயத்தில் கோட்டா - மஹிந்த தரப்பை விடத்தாங்கள் தீவிரமானவர்கள் என்று காட்ட முயலும். அப்படிக்காட்டினால்தான் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர ணியில் தாங்கள் கூடிய ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை அதற்கு.

ஆக, இனி ஐ.தே.கட்சிக்குள் இருந்தும் திடீரென பௌத்த - சிங்களப்பேரினவாதம் புட்டுக்கொண்டு வெளிக்கிளம்பும். பொதுஜனப் பெரமுனவுக்கு போட்டியாக அது சீறும்...

இதுவரை ஐ.தே.கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமை அப்போது என்ன செய்யும்....? பொறுத்திருந்து பார்ப்போமே...!

- மின்னல் -

## மத்திய வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது இடத்துக்குப் புதிய ஆளுநராக நியமிப்பதற்கு பலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள் பலர் அந்த நிறுவனத்திலேயே படிப்படியாகப் பதவி உயர்வுடன் வந்தவர்களாகவே இருந்தனர்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னணி தொழிலதிபர் சுனில் மெண்டிஸை ஆளுநராக நியமித்த பின்னர் வெளியாட்கள் மத்திய வங்கி ஆளுநராக உள்வாங்கப்பட்டனர்.

இந்த நிலையில் மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிப்பதற்கு தற்போதைய பிரதி ஆளுநர் நந்தலால வீரசிங்க, முன்னாள் பிரதி ஆளுநர்கள் ராணி ஜெயமக, சி.பி.ஜே.சிறிவர்த்தன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு இலங்கை மன்றக் கல்லூரியின் முன்னாள் தலைவர் ராஜித பண்டாரவின் பெயர் முதலிடத்தில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மைச் சமூகம் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்யமுடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திரும்பத்திரும்பக் கூறிவருகிறார். இலங்கையில் உள்ள எல்லா இன மக்களும் சமனாகக் கருதப்படவில்லை என்பதற்கு இந்தக் கூற்றே சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அனுப்பிவைத்த கேள்வி பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஊடகவியலாளர் கேள்வி: பாரதப் பிரதமர் 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தியிருக்கிறார். 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு ஒரு தீர்வாகுமா?

பதில்: இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவுக்குப் பயணம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் கேட்டிருப்பது தமிழ் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கின்றது என்பது உண்மையே.

ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும்வகையில் தமிழ் மக்களின் நீண்டகால வேணவாக்களை நிறைவுசெய்யும் வகையில் இணைந்த வடக்கு - கிழக்கில் சுய நிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்தியா விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு சட்ட நிபுணர்கள் சேர்ந்து இலங்கை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு நிரந்தர அரசமைப்பை வெகுவிரைவில் தயாரிக்கவேண்டுமென்பதே எம் மக்களின் பரந்துபட்ட எதிர்பார்ப்பு.

ஆனால் இன்று இலங்கை அரசமைப்பின் ஒரு பகுதியாக காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. தற்போதைக்கு இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அதன் நடைமுறைப்படுத்தலுக்கு பாதகமாக அமைந்திருக்கும் 1992ஆம் ஆண்டின் 58ஆம் இலக்கச் சட்டம் போன்றவை உடனே கைவாங்கப்பட வேண்டியது கட்டாயமாகின்றன.

மேலும் வடக்கு- கிழக்கு இணைக்கப்பட வேண்டும். தரப்பட்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். ஆனால் இவை தந்தால்கூட 13ஆவது திருத்தசட்டம் எந்த அடிப்படையிலும் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளை மற்றும் உடனடியான பிரச்சினைகளைக் கூடத் தீர்க்கமாட்டாது.

எனவே தீர்ப்பதற்குப் போதிய அதிகாரத்தை வழங்கும் வகையில் 13ஆவது திருத்தச் சட்டம் காணப்படாமையினால் இயன்றளவு விரைவாக நிலையான தீர்வு ஒன்றை கொண்டுவருவதற்கான தலையீட்டை இந்தியா மேற்கொள்ளவேண்டும் என்பதையே தமிழ்மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். நாம் ஒற்றையாட்சிக்குள் தெற்கில் இருக்கும் பெரும்பான்மை மக்களின் கைப்பொம்மையாக 13 ஆம் திருத்தச் சட்டத்தினால் மாற்றப்பட்டிருப்பதை யாவரும் உணர வேண்டும். ஆனால் வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்களே பெரும்பான்மையானவர்கள் என்பதையும் யாவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

எமது நிலங்கள், மொழி, கலாசாரம், வாழ்வு முறை, பாரம்பரியம், மதத் தலங்கள் யாவும் பெரும்பான்மை மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் பெற்றுக் கொண்டுள்ள அதிகாரங்களால் இன்று பாதிக்கப்பட்டு வருகின்றன. எமது தனித்துவம் வெகுவிரைவில் மறையும் நிலைமை எம்மை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதை நாம் உணர வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் முன்னெப்போதையும்விட மோசமான அடக்குமுறைக்குள் அகப்பட்டுள்ளனர். அவர்களின் இருப்பும் அடையாளமும் முற்றாக அழிந்து போகும் ஆபத்துக்குள் அவர்கள் தற்போது இருந்து வருவதை இந்தியா உணரவேண்டும். இந்தியாவே எமது பாதுகாப்பு அரணாகத் தற்போது இருக்கின்றது. தமது இன்னல்கள் துன்பங்களுக்கு முடிவுகட்டி எமது வரலாற்றுக்கால கீர்த்தியையும் பெருமையையும் நாம் நிலைநாட்டும் வகையில் இந்தியா காத்திரமான ஒரு தலையீட்டைச் செய்யும் என்று எமது மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்தியப் பிரதமர் 2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த போது நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கூட்டு சமஷ்டி அடிப்படையிலான ஒரு ஆட்சி முறை குறித்து பிரஸ்தாபித்திருந்தமை தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை அளித்திருந்தது. அதனை இத்தருணத்தில் இந்தியத் தலைவர்களுக்கு நினைப்பு ஊட்ட வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது.

முக்கியமாக இதனை இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது. அவர் இங்கு பதவிகள் வகித்தவர். எமது நிறைகுறைகளை அறிந்தவர்.

13 ஆவது அரசமைப்பு திருத்தம் என்பது ஒரு கையினால் சிறிதளவு அதிகாரத்தைக் கொடுத்து மறுகையினால் அதனை எடுத்துக் கொள்ளும் ஒரு சட்டக்கையாளுகை என்பதை வட மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில் நான் தெளிவாகவே புரிந்து கொண்டிருந்தேன். தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால நியாயபூர்வமான அரசியல் கோரிக்கைகளைக் கிஞ்சித்தும் திருப்தி செய்யும் வகையில் ஒற்றையாட்சி அமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் அமையவில்லை. அபிவிருத்திகள் கூட எம் மக்கள் நினைத்தவாறு நடைபெற இடமில்லை. யாவையும் மத்தியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றது.

அதிகாரப் பரவலாக்கம் என்று கூறினாலும் பல்வேறு குறைபாடுகளை 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநரே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார். நான் முதலமைச்சராக இருந்தபோது நான் சில அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தமை தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலமை இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

முதலமைச்சர் தீர்மானங்களை ஆளுநர் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சட்டம் எதிர்பார்த்திருக்க முதலமைச்சரின் தீர்மானத்தை வர்த்தமானியில் ஆளுநர் தனக்கே தெரிந்த காரணங்களுக்காகப் பிரசுரிக்காது விட்டமையால், ஆளுநருக்கே அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் பதவி இறக்கும் அதிகாரம் உள்ளது என்று நீதிமன்றம் கூறுமளவுக்குநிலைமைசென்றுள்ளது.

ஜனாதிபதியின் கையாளான ஆளுநரின் பிழைகளைத் தட்டிக் கேட்க நீதிமன்றங்களே தயங்குகின்றன.

ஜனாதிபதியின் கைகளிலேயே மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் இருக்கிறன்து. ஆளுநரின் அதிகாரம் மற்றும் அவரின் செயற்பாடுகள் ஜனாதிபதியினால் கட்டுப்படுத்தப்படக்கூடியன. அவ்வாறெனின் அந்தச் சட்டத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கத்தின் நோக்கம்தான் என்ன?

வெறும் கண்துடைப்பே என்பது எனது பார்வை மற்றும் ஆளுநரின் அனுமதி இன்றி மாகாண சபையின் நிதியத்தை மாகாண சபை கையாள முடியாது. நான் முதலமைச்சராக இருந்த போது முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தபோதுங் கூட அரசு அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

மேலும் வெண்ணெய்திரண்டு கொண்டு வந்தபோது தாழியை உடைத்தது போல் பழங்கள், மரக்கறிகளை வன்னியில் பயிர்செய்து அவற்றை ஏற்றுமதி செய்ய நாம் பாடுபட்டு உருவாக்கிய செயற்றிட்டம் ஒன்று காணியின் ஒரு பகுதி வன இலாகாவுக்கு சொந்தம் என்ற ஒரு புனைந்துரைக்கப்பட்ட கூற்றின் மூலம் தடைசெய்யப்பட்டது.

முழு நாட்டுக்கும் வரவிருந்த பொருளாதார நன்மை மத்திய அரசின் குறுகிய காழ்ப்புணர்ச்சி எண்ணங்களால் நடைமுறைப்படுத்தப்படாது போனது. வடக்கு மாகாணம் தானாக விருத்தியடைவதை மத்தி விரும்பவில்லை என்பது கண்கூடு.

அடுத்து பொலிஸ் மற்றும் ஒழுங்கு தொடர்பிலான அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. காணி உட்பட பல்வேறு அதிகாரங்களும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி வசமே இருக்கின்றன. இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தின் வழியாகவே மத்திய அரசின் பல்வேறு திணைக்களங்களும் அதிகார சபைகளும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் பெருமளவில் அபகரித்துள்ளன.

அவை எம் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கலிலும் ஈடுபட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடைபெறுவதை இன்று நாடறியும். இவ்வாறான பௌத்த பிக்குகளின் கெடுபிடிகள் வட கிழக்கில் தொடருமானால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வட கிழக்குத் தமிழ் மக்கள் பௌத்தத்தைக் கைவிட்டு தமது முன்னைய மதமான சைவத்திற்குத் திரும்பிய எமது மக்களை மீண்டும் பௌத்தத்துக்குள் பலாத்காரமாக மதமாற்றம் செய்வதாக ஆகிவிடும்.

இத்தகைய குறைபாடுகள் காரணமாகவே இந்தத் திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தமிழ் தலைமைகள் மீண்டும் மீண்டும் இதனை நிராகரித்து வந்துள்ளனர். முதலில் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ந் திகதி எமது எதிர்ப்பு இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதன் பின் தொடர்ந்து எமது குறைகளை அரசுக்கும் அகில நாடுகளுக்கும் எடுத்தியம்பி வருகின்றோம்.

ஆகவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசிடம் கோருவதன் மூலம் இலங்கையில் தமிழ் மக்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யலாம் என்றோ அல்லது அவர்களின் தனித்துவத்தை நிலைநிறுத்தலாம் என்றோ அல்லது அவர்களின் நீண்டகால நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவுசெய்யலாம் என்றோ இந்தியா எதிர்பார்க்க முடியாது. வேண்டுமெனில் முழுமையான ஒரு தீர்வை நோக்கி நடக்க திருத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமானது தற்காலிகமாகப் பாவிக்கப்படலாம்.

13ஆவது திருத்தச் சட்டம் இன்று இல்லையென்றால் அடுத்த நாளே பெரும்பான்மையினத்தின் முழுமையான ஆக்கிரமிப்பு வடக்கு - கிழக்கில் நடைபெறும்.

அதேவேளை, தொடர்ந்து வரும் இலங்கை அரசுளின் சந்தர்ப்பவாத மன மாற்றங்களோ அல்லது சந்தர்ப்பவாத அணுகுமுறைகளோ இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை நீண்டகால அடிப்படையில் உறுதி செய்ய உதவாது என்பதை இந்தியா புரிந்துகொண்டுள்ளது என்பதே எமது கூர்நோக்கு ஆகவே, நீண்டகால அடிப்படையில் இலங்கையில் தமிழ் மக்களின் நிலையான பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்தும் வகையிலும் இந்திய நலன்களை உறுதிப்படுத்தும் வகையிலும் இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேவேளை, பெரும்பான்மைச் சமூகம் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்யமுடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். இலங்கையில் உள்ள எல்லா இன மக்களும் சமனாகக் கருதப்படவில்லை என்பதற்கு இந்தக் கூற்றே சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள். சிங்கள மொழி நடைமுறைக்கு வந்தது கி.பி 6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டில், அதற்கு முன்னர் சிங்கள மொழி பேசுவோர் இலங்கையில் இருந்ததில்லை. வடக்கு - கிழக்கில் இன்றும் நாமே பெரும்பான்மையினர். பின் எவ்வாறு சிங்களப் பெரும்பான்மையினர் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்ய முடியாது என்று எமது ஜனாதிபதி கூறலாம்?

அவ்வாறெனின் இலங்கையில் தற்போது பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வல்லாட்சி பரிணமித்துவிட்டதா? நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களும் இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வாக்களித்துள்ளமை சிங்கள மற்றும் தமிழ் மக்களின் திரட்சிகள் எதிர் எதிர் அணுகுமுறைகளில் இருப்பதையும் அவர்களுக்கு இடையிலான முரண் நிலை கூர்மை அடைந்திருப்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைந்து காணப்படவேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துவதுடன் இந்தியாவின் பாதுகாப்பும் இந்தத் தீர்விலேயே தங்கி உள்ளது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## பொய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் செயலாளர்களின் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுவிற்சர்லாந்து தூதரகத்தில் விஸா பிரிவில் பணிபுரிந்து வந்த பெண்ணை இனந்தெரியாத சிலர் வெள்ளை வாகனத்தில் ஏற்றி அவரை இரண்டு மணித்தியாலங்கள் வரை விசாரித்தனர் எனவும் அவரின் கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதித்துள்ளனர் எனவும் விசாரிக்கும்போது அந்தப் பெண்ணை அச்சுறுதியுள்ளனர் என சுவிற்சர்லாந்து தூதுவர் குற்றம்சாட்டியிருந்தார்.

தூதுவரின் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண் முறைப்பாடு எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் தூதுவரின் குற்றச்சாட்டு தொடர்பாக வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத ஆரியசிங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன ஆகியோர் இணைந்தே இந்த விசாரணையை மேற்கொண்டுள்ளனர். இந்த அறிக்கையிலே சுவிற்சர்லாந்து தூதுவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானுக்கான விஜயமொன்றைக் கூடிய விரைவில் மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் பிரதமர் விடுத்த கோரிக்கைக்கான அழைப்பிதழையும் இதன்போது அமைச்சர் குரேஷி கோட்டாபயவிடம் கையளித்துள்ளார். (ஐ)

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை, கிளிநொச்சியிலுள்ள உறவினர்களிடம் சென்று டிசெம்பர் 2ஆம் திகதி கனடாவுக்குச் செல்லவுள்ளதாக தகவல் தெரிவித்துவிட்டு வவுனியா குட்சைட் வீதியிலுள்ள வீட்டுக்கு கணவனும் மனைவியும் ஓட்டோவில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஓமந்தை - விளக்குவைத்த குளம் பகுதியில் வீதியில் படுத்திருந்த மாடு ஒன்றுடன் எதிரே வந்த வான் மோதி நிலை தடுமாறி, வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த ஓட்டோவுடன் மோதியது. இதன்போது கனடாவுக்குச் செல்லத் தயாராகிய இரமணிசுந்தர் இராஜசுலோசனா (வயது 62) படுகாயமடைந்து உயிரிழந்தார். அவரது கணவன் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

## யாழ். இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வத்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 21, 30 வயதுடைய இந்த இளைஞர்கள் இருவரும் மீன் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் பணி புரிபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எவ்.சி.ஐடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான நடவடிக்கைகளைப் பதில் பொலிஸ் மா அதிபர் முன்னெடுத்துள்ளார்.

அரச நிதி கையாடல்கள் மற்றும் பெரும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவு கடந்த ஆட்சியில் 2015ஆம் ஆண்டு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இந்தியா என்ன செய்யப் போகிறது?

அரசியலில் வேறு எந்தப் பதவியை அலங்கரிக்காமல் நேரடியாக ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ.

குறைந்தபட்சம் ஒரு பிரதேச சபைத் தேர்தலில் கூடப் போட்டியிடாதவர் அவர். நேரடியாக அரசியலில் முதல் களம் ஜனாதிபதித் தேர்தல்தான்.

அதில் வென்று அரசியலில் நேரே ஜனாதிபதி பதவிக்கு வந்தவர்.

அதனால், சராசரி அரசியல்வாதிகளின்றும் அதிகம் வேறுபட்டு நிற்கின்றார்.

பொதுவாக அரசியல்வாதிகள் தமது படங்களைப் பல இடங்களிலும் வைத்துத் தம்மைப் பிரசாரப்படுத்துவதில் விடாக்கண்டர்களாக நிற்பர்.

அதுவும், நாட்டின் ஜனாதிபதி என்றால் சொல்லத் தேவையில்லை. அவரின் படம் ஒவ்வொரு அரச அலுவலகத்திலும் முக்கிய இடம்கொடுத்து அலங்கரித்திருக்கும். ஒவ்வொரு அமைச்சரின் அலுவலகத்தில் தொடங்கி சகல இடங்களிலும் அது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சராசரி – சாதரானை – அரசியல்வாதி அல்லர் என்பதால், அரச அலுவலகங்களில் எவரின் படங்களும் வேண்டாம் என்று உத்தரவிட்டு விட்டார். பொது இடங்களில் இருந்த தமது ‘கட்ட அவுட்’களையும் அகற்றுமாறு பணித்து விட்டார்.

இவை அவர் சாதாரண அரசியல்வாதி அல்லர் என்பதை எடுத்துக் காட்டும் அவரது பண்பியல்புகள்.

ஜனாதிபதியான பின்னர் தமது முதல் வெளிநாட்டுப் பயணத்திலேயே – இந்திய விஜயத்தின்போதே – அதனை, தாம் சாதாரண வழமையான அரசியல் தலைவர் அல்லர் என்பதை, அவர் வெளிப்படுத்தி விட்டுத்தான் வந்திருக்கின்றார்.

அவரது இந்திய விஜயம் பரபரப்பாகப் பேசப்பட்டது. அவர் பதவியேற்ற கையோடு – அடுத்த நாளே – தமது இந்திய வெளிவிவகார அமைச்சரை நேரடியாகக் கொழும்புக்கு அனுப்பி, இலங்கையின் புதிய ஜனாதிபதியை புதுடில்லிக்கு அழைப்பதற்கான அழைப்பிதழை நேரடியாகக் கையளிக்கச் செய்திருந்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

தாமும், இந்திய ஜனாதிபதியும் நேரடியாகக் காத்து நின்று, இலங்கையின் புதிய ஜனாதிபதியை வரவேற்று, பெருமதிப்பு அளிக்கச் செய்தார் பிரதமர் மோடி.

இவ்வளவையும் செய்த பின்னர், பகிரங்கமாக அனைவரையும் வைத்துக் கொண்டு, இலங்கையில் தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார் பிரதமர் மோடி.

வெளிப்படையாகப் பார்த்தால் உயர்ந்த கௌரவம் மிக்க வரவேற்போடு மிகப் பணிவாக வைக்கப்பட்ட வேண்டுகோளாகத்தான் அது தோற்றும்.

ஆனால், அந்தக் கோரிக்கையும், அது முன்வைக்கப்பட்ட விதமும், பின்புலமும் இராஜதந்திரமொழியில் வித்தியாசமான அர்த்தம் கொண்டவை.

இந்தியப் பிரதமரின் அந்தக் கோரிக்கைக்கு அந்தப் பகிரங்க நிகழ்வில் பதிலோ, பிரதிபலிப்போ காட்டாத இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது அந்த இரண்டு நாள் விஜயத்தில், இந்தியாவை விட்டுப் புறப்பட முன்னர், இந்தியப் பிரதமரின் கோரிக்கைக்குப் பதிலடி தந்து விட்டே புறப்பட்டார்.

அதன் மூலம், தாம் வழமையான அரசியல் தலைவர் போன்றவரல்லர், வித்தியாசமானவர் என்பதை மீள ஒரு தடவை உணர்த்தியிருக்கின்றார் அவர்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என்றார் பிரதமர் மோடி.

“இல்லை. அது சரிவராது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்த முடியாது. பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட சில விடயங்களை வழங்க முடியாது.” – என்ற தமது பதிலைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உறுதிபடவும் அவர் புதுடில்லியை விட்டுப் புறப்பட முன்னரே பகிரங்கமான பதிலாகக் கூறி விட்டுத்தான் கொழும்பு வந்தார்.

“எழுபது வருடங்களாக எல்லாத் தலைவர்களும் ஒரே விடயத்தைத்தான் உறுதியளித்தார்கள். அது ‘அதிகாரப் பகிர்வு’, ‘அதிகாரப் பகிர்வு’, அதிகாரப் பகிர்வு’ என்பதுதான். ஆனால் என்ன செய்தார்கள்? இறுதியில் எதுவும் நடக்கவில்லை.” – என்று சுட்டிக்காட்டியவாறு தாமும் அப்படித்தான் நடக்கப் போகின்றார் என இந்தியப் பிரதமருக்கு தகுந்த பதிலடி – இந்திய மண்ணிலே வைத்தே – அவர் வழங்கியிருக்கின்றார்.

“பெரும்பான்மைச் சமூகத்தின் உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் எதிராக எதுவுமே செய்யமுடியாது.” – என்று இந்தியப் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி, பிரதமர் நரேந்திர மோடிக்கு பகிரங்கத் தளத்தில் வழங்கிய பதிலாகவே கொள்ள வேண்டியுள்ளது.

தென்னிலங்கையில் ஊதிப் பெருப்பித்து, ஆவேச எழுச்சியாய் விஸ்வரூபம் பெற்றிருக்கும் பௌத்த, சிங்கள பேரினவாதத் தளத்தைப் பயன்படுத்தி, இந்த அசகாய தேர்தல் வெற்றியை ஈட்டியிருக்கும் புதிய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, அதனையே தமக்கான காரணமாகக் காட்டி அதிகாரப் பகிர்வு செய்ய முடியாது என்பதை வெளிப்படையாக இந்தியாவுக்கு உணர்த்தியிருக்கின்றார்.

அண்மைக் காலத்தில் இந்தியாவைக் கையாளும் விடயத்தில் இவ்வளவு அப்பட்டமாகவும், வெளிப்படையாகவும் நடந்த இலங்கை அரசுத் தலைவர் இவராகத்தான் இருக்க முடியும்.

இராஜதந்திர மொழியில் கூறுவதானால், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டுக்குக் உடனடிப் பதில் (Instant Replay) இலங்கை அரசுத் தலைவரிடம் இருந்து வந்து விட்டது.

இனி இந்தியா என்ன செய்யப் போகின்றது?

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுவிஸ் தூதரகம் முன்பாக போராட்டம்



கொழும்பு, டிசெ. 03

கொழும்பிலுள்ள சுவிற்ஸர்லாந்து தூதரகப் பணியாளர் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் என்பதால் ,அந்தப் பெண் பணியாளர் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்து விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும் என வலியுறுத்தி முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மேஜர் அஜித் பிரசன்ன சுவிஸ் தூதரகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை தனது போராட்டத்தை ஆரம்பித்தார். (ஐ)

# சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தல்; கைவிரித்தது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, டிசெ. 02

சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் முரண்பாடுகள் இருக்கின்றன என வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் –

கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தில் உள்நாட்டில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் தொடர்பாக கூறப்படும் குற்றச் சம்பவம் குறித்து இலங்கை அரசு தீவிர கவனம் செலுத்தி, 2019 நவம்பர் 25 திங்கள் அன்று இந்த விவகாரம் குறித்து உடனடியான முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் வெளியுறவுத்துறை செயலாளர் ரவிநாத ஆரியசிங்க மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமால் குணரத்ன மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் சுவிட்ஸர்லாந்தின் தூதுவர் ஹான்ஸ்பீட்டர் மொக்கையும், தூதுவராலய செயற்பாடுகளுக்கான பிரதித் தலைவரையும் சந்தித்து, பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவுகள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்தனர்.

2019 நவம்பர் 29 வெள்ளிக்கிழமை சுவிட்சர்லாந்து தூதரகம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், கூறப்படும் பாதிக்கப்பட்டவரை நேர்காணல் செய்யப்பட வேண்டியிருப்பதால் அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றத் தூதரகம் நடவடிக்கை எடுக்காதபோதும், விசாரணை நடத்தப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படுபவரின் சார்பாக சுவிட்ஸர்லாந்து தூதரகம் முறையாக முன்வைத்தவாறு, கூறப்படும் சம்பவத்தின் தொடர் நிகழ்வுகள் மற்றும் காலவரிசை கூறப்படும் பாதிக்கப்பட்டவர் அந்த திகதியில் மேற்கொண்ட நடமாட்டங்களுடன் ஒத்திருக்கவில்லை என்பதை ஊபர் பதிவுகள், சி.சி.டி.வி காட்சிகள், தொலைபேசி பதிவுகள் மற்றும் ஜி.பி.எஸ் தரவு உள்ளிட்ட சாட்சி நேர்காணல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களால் உறுதியாவது குறித்து தூதுவருக்கு தெளிவான சான்றுகள் வழங்கப்பட்டன.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் சுவிஸ் தூதரகத்துக்கு முன்வைத்த மறுக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில், இந்தக் குற்றச்சாட்டைச் சுற்றியுள்ள உண்மையான விடயங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்காகப் பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படும் தூதரக ஊழியர் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் நேர்காணல் செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர் எனக் கூறப்படுபவர் தான் கடத்தப்பட்டபோது தனக்கு காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்திருப்பதால், அவர் இலங்கையில் உள்ள ஒரு நீதித்துறை மருத்துவ அதிகாரியால் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த இலங்கை அரசுடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குவில் உணவகம் ஒன்றின் உரிமையாளர் தாக்கப்பட்டார்!

## ஆடியபாதம் வீதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 03

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் வைத்து உணவக உரிமையாளர் மீது இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆடியபாதம் வீதி ரயில் கடவைக்கு அருகில் உள்ள உணவக உரிமையாளரே மேற்படிச் சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 10.45 மணியளவில் கொக்குவில் சந்திப் பகுதியில் இருந்து தனது உணவகத்துக்கு ஓட்டோவில் சென்று கொண்டிருந்த அவரை மேட்டார் சைக்கிளில் துரத்திச் சென்றவர்கள் வழி மறித்துத் தாக்குதல் நடத்தினர்.

அவர்களின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கு ஓட்டோவைவிட்டு பாய்ந்த ஓடிய அவரை அந்தக் கும்பல் துரத்திச் சென்றபோதும், அவர் அங்குள்ள வீடொன்றில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இதனால் அவருடைய ஓட்டோவை அடித்து நொறுக்கிய கும்பல், அதனை வீதிக்கு அருகில் இருந்த வெள்ள வாய்க்காலுக்குள் தள்ளி விழுத்தி விட்டுச் சென்றுள்ளது.

(ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
இளைஞனே இதயத்தில் இன்றே மாற்றம் கொள்
இழைக்கப்படும் இன்னல்கள் இன்றுடன் முடியட்டும்,
நாளைய நல்வாழ்விற்காய் இணைந்தே
செயற்படுவோம்
16
2019

நாளை
04.12.2019
புதன்கிழமை
நட்சத்திரம்: சதயம் மு.இ 6.35 வரை
திதி : அட்டமி பி.இ 2.37 வரை
இராகுகாலம் : 12.15 – 1.45
சுப நேரம் : 4.45 – 6.15

# இராஜதந்திர வெற்றியை பெற்று தந்தார் கோட்டா

## பிரசன்ன ரணதுங்க பாராட்டு



கொழும்பு, டிசெ. 03

முதலாவது வெளிநாட்டு விஜயத்தின் ஊடாக இராஜதந்திர ரீதியில் பெரு வெற்றியை நாட்டுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக்கொடுத்துள்ளார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி கோட்டாபய மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் நாட்டுக்குச் சிறந்த நலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சாதாரண பயணிகள் செல்லும் வழியின் ஊடாகவே தமது பயணத்தை மேற்கொண்டமையுடன், மீண்டும் அதே வழியிலேயே திரும்பி வந்தார்.

இதன்போது விமான நிலையத்தின் செயற்பாடுகளை அவதானித்தமையுடன், புதிதாக பொருத்தப்பட்டுள்ள ஸ்கான் இயந்திரத்தையும் பார்வையிட்டார்.

இதன் விளைவாக எதிர்வரும் நாள்களில் விமானப் பயணிகளுக்குச் சிரமங்களின்றி பயணங்களை மேற்கொள்வதற்கான அனைத்து மறுசீரமைப்புகளையும் துரிதமாக அவர் முன்னெடுப்பார்– என்றார். (ஐ)

# நிஷாந்த சில்வாவை நாட்டுக்கு அழைத்து வருமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவை சர்வதேசப் பொலிஸாரின் ஊடாக நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர்களின் செயலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்களின் செயலாளர்கள் சங்கத்தினரின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.

பல்வேறு விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த, கடந்த 24 ஆம் திகதி தனது குடும்பத்தாருடன் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சுவிட்ஸர்லாந்து நோக்கிப் பயணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே நிஷாந்த சில்வா அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 19 ஆவது திருத்தம் தொடர்பில் கலந்துரையாட மு.கா. தயார்

கொழும்பு, டிசெ. 03

19ஆவது திருத்தச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பாக கலந்துரையாடத் தயார் என ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் அரசியல் யாப்புக்கும் இடையில் ஒரு சமநிலை தன்மை பேணப்படுவது சிறந்தது என அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளமையால், அதனை இரத்துச் செய்யவேண்டுமென அரசு தெரிவித்து வருகிறது. (ஐ)

# பரிசோதனை ஸ்கானரை பார்வையிட்டார் கோட்டா!



கொழும்பு, டிசெ. 03

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள பரிசோதனை ஸ்கானரின் செயற்பாடுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆய்வு செய்தார்.

விமான நிலையத்தில் சுங்கப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள இந்த ஸ்கானர், மறைத்து வைத்திருக்கும் போதைப் பொருள்களை உடல் பரிசோதனை இல்லாமலேயே கண்டறியும்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த சனி இரவு கோட்டாபய நாடு திரும்பினார். இதன்போது, அந்த ஸ்கானர் வழியாக ஜனாதிபதி குழுவினரின் பயணப்பொதிகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

இதன்போது, ஸ்கானரின் செயற்பாடுகளையும் கோட்டாபய பார்வையிட்டார். (ஐ)







# வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுவர்கள் விழிப்புணர்வு நிகழ்வு

வவுனியா, டிசெ. 03

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெ.ஜெயக்கெனடி தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்ட நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா , வவுனியா மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் என். கமலதாசன் ஆகியோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக எவ்வாறு மாணவர்கள் செயற்படுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகச் சிறுவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதில் 50க்கு மேற்பட்ட வவுனியா மாவட்ட சிறுவர் சபையைச் சேர்ந்த சிறுவர்கள் பங்குபற்றியிருந்தனர். (ஐ –

# வவுனியா விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 03

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் ஏ–9 வீதியில் நின்ற மாட்டுடன் மோதியுள்ளனர்.

இதன்போது தூக்கி வீசப்பட்ட இரு இளைஞர்களும் எதிரில் வந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் வத்தளையைச் சேர்ந்த 21 வயதுடைய கிருபாகரன் துஷ்யந்தன் உயிரிழந்துள்ளமையுடன், அவருடன் பயணித்த ரஞ்சித்குமார் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இளைஞர்களின் மோட்டார் சைக்கிளில் மோதுண்ட மாடும் உயிரிழந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# எதிர்வரும் ஜனவரி முதல் நேரடி வரியும் குறையும்



எதிர்வரும் ஜனவரி முதல் நேரடி வரியும் குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல்ல குணவர்தன தெரிவித்துள் ளார்.

ஏற்கனவே மறைமுக வரிகள் குறைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாத சாதாரண வரித் திட்டத்தைச் செயற்படுத்துவதாகவும் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருள்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக அறவிடப்பட்டுவந்த அனைத்து வரி அறவீடுகளும் சலுகைத் திட்டத்திற்கமைய நேற்று முதல் கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஏனைய வரி அறவீடுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச் சர் மஹிந்தவினால் வெளியிடப்படும் – என்றார். (ஐ)

# தமிழகத்தில் ஆன்மிக அரசியல் எழுச்சி பெற்று 2021 சட்டசபைத் தேர்தலில் அதிசயம் நடக்கும்





சென்னை,டிசெ.03

'தமிழகத்தில் 2021ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் ஆன்மிக அரசியல் எழுச்சி பெறுவதன் மூலம் அற்புதமும், அதிசயமும் நடக்கும்' என்று சென்னையில் நேற்று முன்தினம் நடந்த ஆன்மிக அரசியல் மாநாட்டில் இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் கூறினார்.

இந்து மக்கள் கட்சி சார்பில், சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் ஆன்மிக அரசியல் மாநாடு நடந்தது. மாநாட்டை முன்னிட்டு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் இருந்து காவிக்கொடி பேரணி தொடங்கியது. இதற்கு இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத் தலைமை தாங்கினார்.

இந்தப் பேரணியில் ருத்ராட்ச மாலை, காவித்துணி போர்த்திய திருவள்ளுவர் சிலை மற்றும் மாணிக்கவாசகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டன.

ஆன்மிக அரசியல் மாநாடு நடைபெறும் வை.எம்.சி.ஏ. மைதானம் வரைக்கும் இந்து மக்கள் கட்சியினர் காவிக் கொடி ஏந்தியபடி பேரணியாக சென்றனர். இதைத் தொடர்ந்து ஆன்மிக அரசியல் மாநாடு நடந்தது. மாநாட்டை நடிகர் எஸ்.வி.சேகர் தொடங்கி வைத்தார்.

மாநாட்டுக்கு இந்து மக்கள் கட்சி நிறுவன தலைவர் அர்ஜுன் சம்பத் தலைமை தாங்கினார். பின்னர் அங்கு அவர் பேசியவை வருமாறு: –

தமிழகத்தில் திராவிட அரசியலுக்கு மாற்றாக, தேசிய அரசியலை, ஆன்மிகம் சார்ந்த வளர்ச்சி அரசியலை கொண்டு வருவதற்காக இந்த மாநாடு நடத்தப்படுகிறது. தமிழகத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மத்திய அரசு கொண்டு வருகிறது. ஆனால் அவற்றை வரவிடாமல் தடுக்கின்றனர். தமிழகத்தையும், தமிழர்களையும் வஞ்சிக்கும் அரசியலுக்கு மாற்றாக, வளர்ச்சி அரசியலை, ஆன்மிக அரசியலை முன்னிறுத்துவதே எங்கள் நோக்கம். அதேபோல் செயின்ட் ஜோர்ஜ் கோட்டையை, வள்ளுவன் கோட்டையாக மாற்றுவதற்காகவே இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்து மதத் தெய்வங்களை இழிவுபடுத்துவதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. அதனை வியூகம் வகுத்துத் தடுப்போம்.

பிரதமர் மோடியின் மீது வெறுப்புணர்வு இருப்பதால் தமிழகத்தின் வளர்ச்சியை சிதைப்பதுடன், எதிர்க்கிறார்கள். இந்து கலாசாரமே தமிழ் கலாசாரம் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

ஆன்மிகத்தின் மீது நம்பிக்கை கொண்ட நடிகர் ரஜினிகாந்துக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. அவர் அரசியலுக்கு வருவதை எதிர்க்கின்றனர். அவர் அரசியலுக்கு வருவதில் தவறில்லை. தமிழகத்தில் 2021 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் ஆன்மிக அரசியல் எழுச்சி பெறுவதன் மூலம் அற்புதமும், அதிசயமும் நடக்கும்.

அதேபோல் உள்ளாட்சி தேர்தலில் அரசியல் தேவையற்றது. மக்களுக்கு சேவை செய்பவர்கள் தேர்தலில் போட்டியிடலாம், அவர்களுக்கு இந்து மக்கள் கட்சி துணை நிற்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த மாநாட்டில், கோவில் சொத்துகளைக் காக்க வேண்டும், சாதி, மத பேதமற்ற சமத்துவ ஆட்சி மலர்ந்திடவும், மது இல்லாத மகிழ்ச்சியான தமிழகத்தை அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் இலங்கை கலாசார மைய முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரன் அருளானந்தம், மட்டக்களப்பு எம்.பி. சீனிதம்பி யோகேஸ்வரன், இலங்கை சிவசேனா கட்சி தலைவர் சச்சிதானந்தம், நாகராஜ அடிகள், கவிஞர் காசி ஆனந்தன், ஆதீனங்கள், மடாதிபதிகள், சிவனடியார்கள், இந்து மக்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பங்கேற்றனர்.



சென்னை ஆன்மிக அரசியல் மாநாட்டில் இலங்கையில் இருந்து சென்ற வழிபாட்டாளர்கள்.

## மழையால் சுவர் விழுந்ததில் 4 வீடுகள் இடிந்தன கோவையில் 17 பேர் நித்திரைப் படுக்கையில் பலி





மேட்டுப்பாளையம்,டிசெ.03

கோவை மேட்டுப்பாளையம் அருகே மழையால் வீடுகளின் மீது கொம்பவுண்ட் சுவர் இடிந்து விழுந்ததி பெண்கள்,குழந்தைகள் உள்ளிட்ட 17 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. தென் மாவட்டங்களான நெல்லை, தூத்துக்குடி கன்னியாகுமரி மாவட்டங்களில் பலத்த மழை கொட்டி வருகிறது.

மேற்கு மாவட்டங்களான கோவை, ஈரோடு, திருப்பூர் நீலகிரி மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.

மேட்டுப்பாளையம் நடூர் ஏ.டி. கொலனியில் வீடுகள் உள்ள பிரதேசத்திலும் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. நேற்று அதிகாலை 3.30 மணியளவில் அங்குள்ள குடியிருப்பின் பின்பக்கக் கொம்பவுண்ட் சுவர் திடீரென இடிந்து விழுந்தது.

அந்தச் சுவர் 4 ஓட்டு வீடுகளின் மீது வரிசையாக விழுந்தது. அங்கு தூங்கி கொண்டிருந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்கள் சுதாரித்து எழுவதற்குள் வீட்டின் சுவர் விழுந்து அமுக்கியது.

இதனால் சிறுவன், சிறுமி உள்பட 17 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியானார்கள். அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

1. ஆனந்தன் (40)
2. நதியா (36)
3. லோகுராம் (8)
4. அட்சயா (6),
5. ஹரிசுதா(17)
6. ஓபியம்மாள் (60)
7. நிவேதா (19)
8. குரு (45)
9. சிவகாமி (50)
10. வைதேகி (20)
11. திலவகதி (50).

மேலும் 6 பேர் பெயர் விவரம் தெரியவில்லை. 17 பேர் உடல்களை தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்.

4 குடும்பத்தை சேர்ந்த 15 பேர் பலியான தகவல் கிடைத்ததும் அவர்களது உறவினர்கள், கிராம மக்கள் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் பலியானவர்களின் உடல்களைப் பார்த்துக் கதறி அழுதனர். பலியானவர்கள் உறவு முறை உடனடியாக தெரியவில்லை. 4 வீடுகள் இடிந்து 17 பேர் பலியான சம்பவம் மேட்டுப்பாளையத்தில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



## 'இந்துத்வா'வை ஒரு போதும் கைவிடேன் மகராஷ்டிர முதல்வர் தாக்கரே சூளுரை!



மும்பை,டிசெ.03

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து – பாரதீய ஜனதாக் கட்சிக்கு மாறாக – மராட்டிய மாநிலத்தில் ஆட்சி அமைதிருக்கும் சிவசேனாத் தலைவர் உத்தவ் தாக்கரே தான் 'இந்துத்வா'வை ஒரு போதும் கைவிட மாட்டார் என சட்டசபையில் சூளுரைத்தார்.

காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடன் சேர்ந்து மராட்டியத்தில் சிவசேனா கூட்டணி ஆட்சி அமைத்து உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சட்டசபையில் எதிர்க் கட்சி தலைவராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பாரதீய ஜனதாவின் தேவேந்திர பட்னாவிஸுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானத்தை கொண்டு வந்து முதலமைச்சர் உத்தவ் தாக்கரே பேசினார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

பட்னாவிஸ் என்னுடைய நண்பர். நாங்கள் நீண்ட காலமாக நல்ல நண்பர்களாக இருந்தோம் என்பதை ஒப்புக்கொள்ள நான் தயங்க மாட்டேன்.

அவரிடம் இருந்து நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டேன். எப்போதும் அவருடன் நட்பாக இருப்பேன்.

அவரை எதிர்க்கட்சி தலைவர் என அழைக்க மாட்டேன். அவர் பொறுப்பான தலைவர்.

நான் இன்னும் 'இந்துத்வா' சித்தாந்தத்துடன்தான் இருக்கிறேன். அதை ஒருபோதும் விட்டு விட மாட்டேன். கடந்த ஐந்து ஆண்டுகளில், ஒருபோதும் நான் பாரதீய ஜனதாவுக்குத் துரோகம் செய்யவில்லை

நான் திரும்பி வருவேன் என்று ஒருபோதும் கூறியதில்லை. ஆனால் நான் சட்டசபைக்கு வந்து இருக்கிறேன். பல ஆண்டுகள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவர்கள் ஆட்சி அமைப்பதற்காக என்னுடன் சேர்ந்து விட்டார்கள்.

அதே நேரம் நண்பர்களாக இருந்தவர்கள் இந்த சபையில் எதிர்க்கட்சி வரிசையில் அமரச் சென்றுவிட்டனர்.

நீங்கள்(பா.ஜனதா) எங்கள் பேச்சை கேட்டு இணக்கமாக இருந்து இருந்தால், இது எதுவும் நடந்து இருக்காது. இன்று நடப்பதை நான் வீட்டில் இருந்து டி.வி.யில் பார்த்து கொண்டு இருந்து இருப்பேன்.

நான் நள்ளிரவில் எதையும் செய்ய மாட்டேன் என இந்த சபைக்கும், மராட்டிய மக்களுக்கும் உறுதி அளிக்கிறேன். மக்களின் நலனுக்காக செயல்படுவேன். விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்வது மட்டும் அல்லாமல், அவர்களின் துயரங்களையும் இந்த அரசு துடைக்கும். – இவ்வாறு அவர் பேசினார்.

# மெக்ஸிக்கோவில் துப்பாக்கிச் சமர் 4 பொலிஸார் உட்பட 21 பேர் சாவு






மெக்ஸிக்கோ சிட்டி,டிசெ.03

மெக்ஸிக்கோவில் ஆயுதக் கும்பலுக்கும், பொலிஸாருக்கும் இடையே நடந்த சண்டையில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் எல்லையோரத்தில் அமைந்துள்ள மெக்சிகோவின் கோஹுய்லா மாகாணத்தில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. ஆயுதம் ஏந்திச் செயல்பட்டு வரும் இந்தப் போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரை குறிவைத் துத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அந்த மாநிலத்திற்குட்பட்ட வில்லா யூனியன் குடியிருப்பு பகுதியில் கொள்ளையடித்து, சூறையாடுவதற்காக வந்த ஆயுதமேந்திய கும்பல் அங் குள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அரசு அலு வலகங்கள் மீது அதிரடியாக தாக்குதல் நடத்தியது. சில வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

இது பற்றித் தகவல் கிடைத்ததும் பாதுகாப்பு படையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று போதைப்பொருள் கடத்தல் காரர்களைச் சுற்றிவளைத்துத் தாக்கினர்.

இரு தரப்புக்கும் இடையே பல மணி நேரம் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். அதே போல் பாதுகாப்பு படையினர் 4 பேர் பலி யாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தொடர்ந்து பிற இடம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் மேலும் ஏழு பேர் கொல்லப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

## அமெரிக்காவில் நேற்றுக் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் 11 பேருக்குக் காயம்





நியு ஆர்லியன்ஸ்,டிசெ.03

அமெரிக்காவின் நியு ஆர்லியன்ஸ் நகரில் உள்ள பிரெஞ்ச் குடியிருப்பு பகுதியில் நேற்று அதிகாலை 3.20 மணிக்கு அடையாளம்தெரியாதநபர்கள்அங்கிருந்த மக்கள் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் படுகாயமடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர். காயமடைந்தவர்களில் இரண்டு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடந்த இடம் வணிக வளாகங்களுக்கு அருகில் உள்ள மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாகும். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு நபரை காவல் துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சி மற்றும் பிற தகவல்கள் குறித்தும் லூசியானா பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## நமீபிய ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அதிபர் வெற்றி!




தென்னாப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவில் நடந்த அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஹாகே கெயிங்கோப் இரண்டாவது தடவையாக மீண்டும் வெற்றி பெற்றார்.

மேலும் அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலிலும் ஹாகே கெயிங்கோப்பின் கட்சி வெற்றி பெற்றது.

எனினும் கடந்த தடவை தேர்தலில் அவர் பெற்ற 87 சத வீத வாக்குகள் இம்முறை 56 வீதமாகக் குறைந்துள்ளது.

அவரது கட்சியில் இருந்தபடியே அவரை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்ட பண்டுலென்ஸி இதுல் 29 வீத வாக்குகள் பெற்று இரண்டாவதாக வந்தார்.

உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆக 5.7 வீத வாக்குகளே கிடைத்தன.

கடந்த தடவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்ற அதிபர் கெயிங்கோப்பின் கட்சி இம்முறை அதனை இழந்த் போதிலும் ஆட்சியைக் கைப்பற்றத் தேவையான சாதாரண பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது.

ஊழல் மற்றும் அடக்குமுறைக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலேயே இந்த வெற்றியை அதிபர் கெயிங்கோப் பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடலில் மூழ்கி வரும் பிலிப்பீன்ஸ் கிராமம்



மணிலா,டிசெ.03

பிலிப்பீன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் இருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது சிடியோ பரிஹான் கிராமம். ஒரு காலத்தில் தீவாக இருந்த இந்தக் கிராமம் தற்போது நிலப்பரப்பே கண்ணில் படாத வகையில் கடலில் மிதக்கும் கிராமமாக மாறியிருக்கிறது. புவி வெப்பமயமாதல் பிரச்சினையால் கடல் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் சிடியோ பரிஹான் கிராமம் மெல்ல மெல்லக் கடலில் மூழ்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 சென்டி மீற்றர் அளவிற்கு இந்தக் கிராமம் கடலில் மூழ்கி கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிக்கே அல்லாடும் இந்தக் கிராமம் சூரிய மின்சக்தி மூலமே மின்சாரம் பெறுகிறது. இங்கிருக்கும் ஒரே ஒரு கிணறு தான் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. மக்கள் இந்தக் கிணற்று நீரையே குடிக்கவும், குளிக்கவும், சமையலுக்கும் பயன்படுத்துகின்றனர். இந்த கிராமத்தில் இருந்த நீதிமன்றமும், தேவாலயமும் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலில் அழிக்கப் பட்டு விட்டன.

அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள் என்பதால் வேறு எங்கும் செல்ல முடியாமல் இன்னல்களுக்கு மத்தியில் அங்கேயே வசித்து வருகின்றனர். கடலின் நீர்மட்டத்தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க கிராம மக்கள் மூங்கில்களை கொண்டு வீட்டின் உயரத்தை உயர்த்தி வருகின்றனர்.

இது நிரந்தர தீர்வாகாது என்றும், விரைவில் இந்தக் கிராமம் முழுமையாகக் கடலில் மூழ்கி விடும் என்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

## அடுத்த ஆண்டுக்குள் செயற்கைச் சூரியனை வானில் நிறுத்துவார்கள் சீன விஞ்ஞானிகள்



2020 ஆம் ஆண்டுக்குள் செயற்கை சூரியனை உருவாக்கும் முயற்சியில் சீன விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

எச்.எல் – 2எம் டோகாமாக் (HL - 2M Tokamak) என்று செயற்கைச் சூரியனுக்கு அவர்கள் பெயரிட்டுள்ளனர்.

செயற்கைச் சூரியனில் பொருத்தப்பட இருக்கும் கொயில் (சுருள்) அமைப்பு ஜுன் மாதம் அளிக்கப் பட இருக்கிறது. அது கிடைத்ததும், 2020 ஆம் ஆண்டில் அதை வானில் நிறுவ முடிவு செய்துள்ளனர்.

கட்டுப்படுத்தப்பட்ட நியூக்லியர் பியூசன் எனப்படும் அணு இணைவு (nuclear fusion) மூலம் செயற்படும் செயற்கை சூரியனில், 200 மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பமும் வெளிச்சமும் உருவாகும் என்றும், அதிலிருந்து சுத்தமான மற்றும் அளவில்லாத எரி சக்தி வலுவைப் பெற முடியும் என்றும் சீன விஞ்ஞானி கள் நம்புகின்றனர்



திரு.க.கோபாலகிருஷ்ணன், செயலாளர்
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம் - அரொட்

# மாற்றுவலுவுடையோர் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவோம்!

**ஆண்டில் ஒருதினம் மாற்று வலுவுடையோருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவே மார்கழித் திங்கள் மூன்றாம் நாள்.**

உலகில் ஒவ்வொரு துறையும் – விசேடமாக அறிவியல்விஞ்ஞானத்துறை – எம்மால் கற்பனை பண்ண முடியாத வேகத்தில் வளர்ந்து செல்கின்றது.

மனிதவளம் சக்தியாகவும் ஆய்வுகளிலும், சாதனைகளிலும் செலவு செய்யப்படுகின்றது. சமூகநலன் பற்றியோ, சமூக வளர்ச்சி பற்றியோ சிந்திக்க வாய்ப்புக்கள் அருகிச் செல்லும் ஒரு யுகத்தையே நாம் காண்கின்றோம். இதுஓர்பெரும்அவலநிலையை உருவாக்கும்.

இன்றைய நிலையில் விபத்துக்கள், நெருக்கடிகள், போசாக்கின்மை, விழிப்புணர்ச்சியின்மை, பாரம்பரியங்களில் இறுக்கமான நம்பிக்கை, ஆபத்தான மருந்துவகைகள் இன்னோரன்ன காரணங்களினால் சமூகத்தில் உடல், உளபுலன் பாதிப்புற்றோர் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. இது பற்றி சிந்திக்கவே நேரமில்லாத சமூகத்தையே காண்கின்றோம்.

கேள்விக் குறைபாடுள்ள குழந்தை ஒலியைக் கேட்க முடியாமையால் சூழலோடு தொடர்பற்றதாகவும், தனியான ஓர் உலகத்திலேயே வாழ்கின்றது. தனது பெற்றோர்களுடனோ, சகோதரர்களுடனோ பேச முடியாது திகைக்கின்றது. பெற்றோர் செய்வதறியாது மூட நம்பிக்கைகளினால் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்காது காலத்தைக் கடத்துகின்றனர். இறுதியில் குழந்தையின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

இதேபோன்று மெல்லக் கற்கும் குழந்தைகள் அண்மைக் காலம் வரை இவர்களுக்கான கல்வி நிலையங்கள் இருந்தாலும் தமது பிள்ளைகளை அத்தகைய நிலையங்களிற்கு அனுப்புவதற்குப் பெற்றோர் விரும்புவதில்லை. ஈற்றில் இழப்பு பிள்ளைகளிற்கே.

இதே போன்றுதான் மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளும். இவர்கள் கற்பிக்கப்படமாட்டாதவர்கள், மருத்துவ நிலையத்தில் சேர்த்து விடுவதைத் தவிர வேறு வழியில்லையென நினைத்துப் பெற்றோர் இவர்களை எதிக்காலமே இல்லாதவர்களாக்கி விடுகின்றனர்.

உடல் ஊனம் கல்வி பெறுவதற்கு எவ்வகையிலும் தடையாகாது. சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்குமே தவிர, தடையாக அமையாது. ஆனால் உரிய வழிகாட்டல், மன உறுதி, இலட்சியம் என்பன இருக்குமாயின் இவர்களையும் பயனுள்ள நல்ல எதிர்காலமுள்ள பிள்ளைகளாக மாற்றமுடியும்.

### புதிய அனுகுமுறை அவசியம்

ஓர் மாற்றுவலுவுடையோர் எதிர்காலத்தில் சுதந்திரமாக, மற்ற எவரையும் எதிர்பாராது, பிறரைப்போன்று ஒருநிறைவான வாழ்க்கையை நடத்த வழி சமைத்துக் கொடுப்பதையே எதிர்பார்க்கின்றனர். அதி அல்லாது ஒரு நாள் உணவையோ, பரிசில்களையோ, பொய் வார்த்தைகளையோ அல்ல.

மேற்கு நாடுகளைப் போன்று ஒரு குழந்தை பிறந்ததுமே குடும்ப ஆலோசகர் மூலம் அந்தக் குழந்தைக்கு ஏதாவது குறைபாடுகள் உண்டா என்பதைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டறிவதற்கு வசதியாக இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருப்பது போன்று மருத்துவ நிபுணர்கள், உளவியல் நிபுணர்கள், கல்வித்துறை நிபுணர்கள், சமூக சேவைத் துறையினர் அடங்கிய குழுக்கள் அந்தந்தப் பகுதிகளில் வைத்திய சாலைகளோடு இணைந்ததாகவோ அல்லது விசேடமாக அமைக்கப்பட்ட நிலையங்களிலோ இயங்க வேண்டும். இது ஓர் அத்தியாவசியமான சேவை. இந்த நிலையங்களிலே இனங்காணப்படும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே அவர்களுக்கான வைத்திய சிகிச்சையை அளிக்க முடியும்.

### பெற்றோர் கடமை

அடுத்தகட்டமாகவைத்தியசிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாது போகுமிடத்து கல்விசார்ந்த புனர்வாழ்வு (Educational Rehabilitation) அளிக்க முடியும்.

உதாரணமாக விழிப்புலன் இழந்த குழந்தையாயின் அதற்கான பாடசாலைக்கோ, செவிப்புலன் இழந்ததாயின் அவர்களுக்கான பாடசாலைகள், கல்வி நிலையங்கள் என்பனவற்றிக்கோ அனுப்புவதன் மூலம் அவர்களுக்கான கல்வியை அளிக்க முடியும்.

இதற்கென பெற்றோர்களிற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், வழிகாட்டலை வழங்குவதற்குமான விசேட சமூக சேவை உத்தியோகத்தர்கள் சகல பகுதிகளுக்கும் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதுமட்டுமன்றி இத்துறையில் அவர்கள் அறிவு, ஆற்றல் என்பன பெற்றிருத்தல் வேண்டும்.

### சமூக சேவை உத்தியோகத்தரின் எதிர்பார்க்கை பணி

மேற்கூறிய சமூகசேவை உத்தியோகத்தரின் கடமைகள் பல வகையானவையாக அமையும். பிள்ளைகளின் குறைபாடுகளை இனங்காண்பதிலிருந்து அவர்களின் பிற்கால வாழ்க்கை வரை இவரின் சேவை தொடர வேண்டும்.

உதாரணமாக இக்குழந்தைகள் கல்வி கற்கும்போது பல இடையூறுகளை எதிர்நோக்குவர். அவற்றையெல்லாம் களைவதற்கான முயற்சிகள் எடுக்கவேண்டும். அரச, அரசசார்பற்ற தாபனங்களிலிருந்து உதவிகளை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். விசேடமாக உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். கல்விகற்று முடிந்தவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக கொடுக்க வேண்டும். அரச சுற்று நிருபமொன்று இவர்களிற்கு மொத்த தொழில் வாய்ப்புக்களில் 6 வீதம்ஒதுக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றது இதனை அமுல்படுத்துவதில் இவ் அதிகாரிகள் முக்கிய பங்கினை வகிக்கலாம் தனியார் நிறுவனங்களிலும் இதேபோன்று வேலை வாய்ப்புக்களை பெற முயற்சிக்கலாம்.


மேலும் இதுவரை மாற்று வலுவுடையோருக்கு வழங்கி வரும் மாதாந்த உதவிப்பணம் ரூபா 3000.00தில் இருந்து ரூபா 5000.00 ஆக உயர்த்தப்பட்டமை வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

மறுபுறத்தில் சாதாரண கல்வியையோ, உயர் கல்வியையோ பெற முடியாதவர்களும் பலர் இருப்பர். அவர்களிற்கான தொழிற் பயிற்சி நிலையங்களினை அமைத்து உரிய பயிற்சிகளினை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு பயிற்சி முடித்தவர்கள் சுய தொழில்களைத் தனியாகவோ, கூட்டாகவோ ஆரம்பிக்கத் தேவையான உதவிகளினையும், வழிகாட்டல்களினையும் வழங்கவேண்டும். தேவையான மூலப் பொருள்கள், இயந்திர சாதனங்கள், ஆரம்ப நிதி என்பனவற்றினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்தோடு அவ்வாறான நிலையங்களில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளையும் செய்துகொடுத்தல் வேண்டும். அத்தோடு பிற அரச, சலுகைகளையும் – உதாரணமாக சிறுவர்கள் தங்கள் பெற்றோரின் ஓய்வுதியத்தைப் பெற்றோர் இறந்த பின் தங்கள் காலம் வரை பெறக் கூடிய சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. ஆனால் பலருக்கு இது பற்றித் தெரிவதில்லை. இங்கும் சமூக சேவை உத்தியோகத்தரே உதவ வேண்டும். இறுதியான இவர்களை சமூகத்தோடு ஒன்றிணைக்



கவும் முயலவேண்டும். (Social Integration) தனிமையில்வாழ்ந்துதாங்கள்ஓர் இரண்டாந்தரப் பிரஜைகளே என்ற எண்ணத்தை உருவாக விடாது ஏனையோரைப் போன்று சரிசமமாக, சுதந்திரமாக இன்னும் சிறப்பாகவாழ முடியுமென்பதை நிரூபிக்க உதவவேண்டும். மேலோட்டமாக நோக்குவோமாயின் அரசு இவர்களின் வாழ்க்கையில் ஒளியை ஏற்றுவதற்கான சகல முயற்சிகளினையும் எடுக்க வேண்டும் அதற்கான உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரதேசங்களிலும் நியமிக்கப்பட வேண்டும் இவ் உத்தியோகத்தர்கள் தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்தி இவர்களிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு நடவடிக்கையினை ஒன்றிணைந்து அரச அதிபர் மற்றும் உயர்அதிகாரிகளின் ஒத்துழைப்பினையும், வழிகாட்டலினையும் ஆசிகளினையும் பெற்று இவர்களின் வாழ்வில் ஓர் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கவேண்டும். இப் புதிய அணுகுமுறையைக் கையாள்வதன் மூலம் நிச்சயம் மாற்று வலுவுடையோரின் வாழ்வு வளம் பெறும்.



**இச்சேவையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் நிச்சயமாக ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்படுவர்.**

# யாழ். மாநகர நன்னீர் குளத்தில் வீசப்படும் மருத்துவக் கழிவுகள்

## அப்பகுதி மக்கள் கடும் விசனம்




யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாணம் மாநகரில் நன்னீர் குளம் ஒன்றினுள் மருத்துவக் கழிவுகள் வீசப்பட்டு உள்ள நிலையில் அவை தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் உள்ள நரிக் குண்டு குளத்தின் உள்ளேயே மருத்துவக் கழிவுகள் வீசப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள டெங்கு தாக்கம் காரணமாக டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் குளத்தை அண்டியுள்ள பகுதியைச் சேர்ந்தவர்கள், தன்னார்வாளர்கள் , இளைஞர்கள் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை குளத்தைச் சுற்றி வீசப்பட்ட கழிவு பொருள்கள் , சுற்றியுள்ள பற்றைகள் என்பவற்றை அப்புறப்படுத்தினார்கள்.

அதன்போது மருத்துவக் கழிவுகள் அடங்கிய பைகள் அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. அதனுள் பாவித்த ஊசிகள் (சிரிஞ்), மருந்துப் போத்தல்கள் என்பன காணப்பட்டுள்ளன. அவை அருகில் உள்ள தனியார் மருத்துவமனை கழிவுகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

நரிக்குண்டு நன்னீர் குளத்தை அண்டிய பகுதிகளில் மருத்துவக் கழிவுகள் , பாவித்த கழிவு பொருள்கள் உள்ளிட்ட கழிவு பொருள்கள் என்பவற்றை வீசி வருவதனால் குளத்தின் நீர் மாசடைகின்றது. அதனால் நிலத்தடி நீர் மாசடைந்து அருகில் உள்ள குடியிருப்பாளர்களின் வீட்டு கிணற்று நீரும் மாசடையும் ஆபத்துள்ளது.

இந்தப் பகுதியில் குப்பைகளை , கழிவுப்பொருள்களை வீசவேண்டாம் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வந்த நிலையிலும் அதனையும் மீறி கழிவுப் பொருள்கள் வீசப்படுவதால் தற்போது அப்பகுதியில் சி.சி.ரி.வி. பொருத்தப்பட்டுள்ளது.

அதனூடாக கழிவுகளை வீசுபவர்களை அடையாளம் கண்டுள்ளபோதிலும் அதிகாரிகள் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் அசமந்தமாகச் செயற்படுகின்றன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதிகாரிகள் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

அத்துடன் தற்போது மழை காலமாக உள்ளமையால் அப்பகுதியில் வீசப்படும் கழிவு பொருள்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் தாம் கடுமையான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ)

# யாழ். டி.ஐ.ஜியாக மகேஷ்




யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக மகேஷ் சேனாரத்ன பதவி யேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் பொறுப்பேற்றார்.

அவர் இதுவரை பொலிஸ் தலைமையக்கதில் தக வல் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வு மையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த ராஜித, பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுக்கு மாற்றலாகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்டுக்கரைக் குளம் வான் பாய்கிறது



மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்தில் தொடச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால், வடக்கு மாகாணத்தின் இரண்டாவது பெரிய குளமான கட்டுக்கரைக் குளம் நிறைந்து வான் பாய்ந்து வருகின்றது.

இதனால் அப்பகுதியைச் சேர்ந்த ஏனைய பல சிறிய மற்றும் நடுத்தரக் குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன.

இதனால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சுமார் 200 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வயல் நிலங்களில் மழை நீர் தேங்கிக் காணப்படுவதனால் முளைத்த நிலையில் காணப்பட்ட நெற் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவிவசாயிகள்கவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

# அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டை மீண்டும் ஆராய்வதற்கு சீன அரசு இணக்கம்



கொழும்பு, டிசெ. 03

இலங்கையும் சீனாவும் தங்களின் நீண்ட கால நட்புறவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை குறித்து மீண்டும் ஆராய்வதற்கு இணங்கியுள்ளன.

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான முன்னாள் தூதுவர் வு ஜியாங்காவோ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறித்து ஆராயப்பட்டதாகவும், இரு தரப்பும் இது குறித்து கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்ட பின்னர் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை குறித்து மீண்டும் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு இணங்கின எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசு நீண்ட கால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து விருப்பம் வெளியிட்டுள்ளது.

இலங்கையுடனான சீனாவின் பொருளாதார ஒத்துழைப்புகளை அதிகாரிப்பது குறித்து சீனாவின் விருப்பத்தை விசேட பிரதிநிதி வெளியிட்டுள்ளார்.

இரு நாடுகளும் கைச்சாத்திட்ட, ஆனால் முன்னைய அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாத திட்டங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கும் இரு தரப்பும் இணங்கியுள்ளன. (ஐ)



# மனதளவில் நான் பதவியை இழக்கத் தயாராக இருந்தேன்!

பாகிஸ்தான் அணியின் தலைவராக இருந்த சர்பராஸ் அகமது, ஏற்கனவே மனதளவில் பதவியை இழக்கத் தயாராகத் தான் இருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்டக்காரரான சஃப்ராஸ் அகமட் அந்த அணியின் தலைவராக திகழ்ந்தார்.



2017 ஆம் ஆண்டு ஐ.சி.சி சாம்பியன்ஷிப் தொடர் இறுதிப் போட்டியில் இந்தியாவை இவரது தலைமையிலான பாகிஸ்தான் அணி வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

அப்போது பாகிஸ்தான் ரசிகர்களாலும், அந்த நாட்டு கிரிக்கெட் சபையினாலும் பெரிதும் பாராட்டப்பட்டார். ஆனால் இங்கிலாந்தில் மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை நடைபெற்ற 50 ஓவர் உலகக்கிண்ண தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியமை பாகிஸ்தான் அணிக்கு பெரிதும் பின்னடைவை ஏற்படுத்தியது.

இதனால் அணித்தலைவராக இருந்த சர்பராஸ் மீது கடும் விமர்சனம் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக ரி-20 மற்றும் டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியின் தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டார். அத்துடன் அணியில் இருந்தும் வெளியேற்றப்பட்டார்.

இந்தநிலையில், தலைவர் பதவியை இழக்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதால், அதற்காகத் தனது மனநிலையைத் தயார்படுத்திக் கொண்டேன் என சர்பராஸ் அகமது தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சர்பராஸ் அகமது கூறுகையில்–

உண்மையாகவே, அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட இருக்கிறோம், அதற்கான மனதளவில் தயாராகிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்தது.

சிரேஷ்ட வீரர்கள் அனைவரும் உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடும்படி ஆலோசனை வழங்கினார்கள். சில நேரங்களில் ஓய்வு என்பது அவசியம். ஏனென்றால், நான் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் கிரிக்கெட்டை விளையாடியுள்ளேன்.

தற்போது என்னுடைய முழுக்கவனம், உள்ளூர் கிரிக்கெட்டை பற்றிதான் இருக்கின்றது. பாகிஸ்தான் தேசிய அணிக்கு திரும்புவதை பற்றி யோசிக்கவில்லை.

என்னுடைய ஆட்டத்தில் கவனம் செலுத்த விரும்புகிறேன். எப்போது என்னை அழைக்கிறார்களோ, அப்போது என்னுடைய ஆட்டத்தை வெளிப்படுத்தத் தயாராக இருக்கிறேன் – என்று தெரிவித்துள்ளார்.



# இலங்கை அணிக்கு அதியுச்ச பாதுகாப்பு

தமது நாட்டுக்குவரும் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கு அதியுச்ச பாதுகாப்பை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் பொலிஸ் மா அதிபர் மொஹமட் அமீர் சுல்பிகர்கான் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி இம்மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அங்கு, ராவல்பிண்டி மற்றும் கராச்சியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில் மோதவுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானின் பொலிஸ் மா அதிபர் மொஹமட் அமீர் சுல்பிகர்கான் தலைமையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் பயணம் தொடர்பான பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பாகிஸ்தானுக்குச் செல்லும் இலங்கை கிரிக்கெட் அணிக்கான பாதுகாப்பு தொடர்பாக மறு ஆய்வு செய்யப்பட்டதுடன், இராணுவ கொமாண்டோக்களை அணியின் பாதுகாப்புக்காகச் சேவையில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இலங்கை அணியினர் பாகிஸ்தானில் தங்கியுள்ள விடுதிகளிலும், விளையாடும் மைதானங்களிலும் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டத்தைத் தடை செய்யவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கோபப்பட்ட கோஹ்லி

தேர்வாளர்களைக் குறை சொல்ல வேண்டுமென்றால் நேரிடையாகப் பேசவேண்டுமென்றும் அதற்காக தன்னுடைய மனைவி அனுஷ்காவின் பெயரை எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும் விராட் கோஹ்லி கேள்வியெழுப்பி யுள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டியில் வீரர்கள் குறித்து கவலை கொள்ளாமல் எம்.எஸ்.கே. பிரசாத் தலைமையிலான தேர்வாளர்கள் நடிகையும் விராட் கோஹ்லியின் மனைவியுமான அனுஷ்கா ஷர்மாவுக்கு தேநீர் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந் தனர் என முன்னாள் விக்கெட் கீப்பர் பரோக் இன்ஜினியர் குற்றம் சாட்டியிருந்தார்.

எம்.எஸ்.கே. பிரசாத் மற்றும் அனுஷ்கா தொடர்பாக பரோக் இன்ஜினீயரின் இந்த விமர்சனம் செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில், தற்போது இந்தப் பேச்சு குறித்து கோஹ்லி தன்னுடைய மௌனத்தைக் கலைத்துள்ளார்.

தேர்வாளர்கள் குறித்து குறை சொல்ல வேண்டுமென்றால் நேரிடையாக பேச வேண்டும். அதை விடுத்து பிரபலமான நடிகையாக உள்ள தன்னுடைய மனைவியின் பெயரை அதில் ஏன் நுழைக்க வேண்டும் என்று கோஹ்லி கேள்வி எழுப்பியுள்ளார்.

அனுஷ்கா போன்ற பிரபலமான நடிகையின் பெயரைப் பயன்படுத்தினால், அந்த விடயம் எளிதாக மற்றவர்களைச் சென்று சேர்ந்துவிடும் என்பதற்காக அவரது பெயரை முன்னாள் விக்கெட் காப்பாளர் பயன்படுத்தியுள்ளார் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எந்த இடத்திற்கு சென்றாலும் விதிமுறைகளை கடைபிடிப்பவர் அனுஷ்கா என்று விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.






# மலிங்கவையே பிரமிக்க வைத்த பந்து வீச்சாளர்

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க, இந்தியா பந்து வீச்சாளர் பும்ராவின் பந்து வீச்சை பார்த்து மிரண்டு போயுள்ளார் எனக் கூறியுள்ளார்.

உலக கிரிக்கெட் போட்டியில் தன்னுடைய ஜோக்கர் மூலம் துடுப்பாட்டக்காரர்களை மிரட்டி வருபவர் இலங்கை வீரர் மலிங்க. ரி20 போட்டிகளில் குறிப்பாக கடைசிக் கட்ட ஓவர்களில் சிறப்பான பந்து வீச்சாளர் என்ற பெயர் பெற்றவர்.

இவர் சமீபத்திய பேட்டி ஒன்றில், இந்தியப் பந்து வீச்சாளர் பும்ராவின் திறமையைக் கண்டு பிரமிப்பதாகக் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்–

கடந்த 2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான மும்பை அணியின் பும்ரா இடம் பெற்றார். நானும் மும்பை அணிக்காக ஆடி வருகிறேன்.

அப்போதிலிருந்து அவரது தனித்துவமான பந்து வீச்சை பார்த்த நான் அவருக்கு எனது ஆலோசனைகளை வழங்கினேன்.

தற்போது உலகின் நம்பர் – 1 ஆக வளர்ந்து நிற்கும் பும்ராவையும் அவரது இந்த வளர்ச்சியை பார்க்க பிரமிப்பாக இருக்கிறது. அதே போன்று அவரது கிரிக்கெட் வாழ்வில் நான் ஆலோசனை வழங்கியுள்ளமை மிக மகிழ்ச்சியான விடயம். ஒரு இளம் வீரருக்கு என்னால் முடிந்தவற்றை நான் பகிர்ந்துள்ளேன்.

என்னைக் காட்டிலும் அவர் பந்து வீச்சில் அதிக திறன்களை வைத்துள்ளார். அனைத்தையும் கற்று கொள்ளும் ஆர்வத்தில் இருக்கிறார். அற்புதமாக யார்க்கர் வீசுகிறார்.

அதிலும் குறிப்பாக மெதுவாக யார்க்கர் பந்துகளை வீசுகிறார். அது எப்படி முடிகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு அவர் விக்கெட் வீழ்த்தும் வேட்கையில் இருக்கிறார் – என்றார்.

# அதை டோனியிடம் கேளுங்கள்!

எதிர்வரும் ரி - 20 உலகக்கிண்ணம் தொடரில் டோனி விளையாடுவது குறித்து அவரிடமே கருத்து கேட்குமாறு இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் கங்குலி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டனும், சிறந்த விக்கெட் காப்பாளருமான டோனி, நியூசிலாந்திற்கு எதிரான உலகக்கிண்ணம் அரையிறுதி தோல்விக்குப் பின்னர் எந்த போட்டியிலும் கலந்துகொள்ளாமல் ஓய்வில்



இருந்து வருகிறார்.

இதற்கிடையில் அவருடைய இடத்தை பூர்த்தி செய்யும் விதமாகக் களமிறக்கப்பட்ட ரிஷாப் பந்த், சமீபத்திய வாய்ப்புகள் அனைத்தையும் தவறவிட்டு வருவதால், கிரிக்கெட் ரசிகர்கள் டோனியை எதிர்ப்பார்த்து காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள 2020ஆம் ஆண்டிற்கான ரி20 உலகக்கிண்ணம் தொடரின் ஒரு பகுதியாக டோனி இருப்பாரா என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சவுரவ் கங்குலியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

மும்பையில் நடைபெற்ற சபையின் 88 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு பின் பதிலளித்த அவர், தயவு செய்து இதனை டோனியிடம் கேளுங்கள் எனக் கூறியுள்ளார்.

முன்னதாக மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட டோனி, கிரிக்கெட் எதிர்காலத்தைப் பற்றி ஜனவரி வரை என்னிடம் கேட்கவேண்டாம் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்கள் இல்லாத புதிய அமைச்சரவை தமிழர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி

## கூறுகின்றார் கருணா அம்மான்



அம்பாறை, டிசெ. 03

முஸ்லிம் பிரதிநிதிகள் இல்லாத புதிய அமைச்சரவை உருவாக்கமானது தமிழ் மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி எனவும், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களை சிங்கள மக்கள் காப்பாற்றிவிட்டனர் எனவும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அம்பாறை, கல்முனைப் பகுதியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் எதிர்காலத் திட்டம் குறித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடத்திய மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களைச் சிங்கள மக்கள் காப்பாற்றிவிட்டனர். முதல் தடவையாக 35 பேர் கொண்ட அமைச்சரவையில் எந்த முஸ்லிம் பிரதிநிதிகளும் இல்லாத அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டது. இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. இந்த அரசு தொடர்ச்சியாக 20 வருடங்கள் ஆட்சி செய்யும். அத்துடன் எதிர்வரும் காலம் தமிழ் மக்களுக்குப் பொற்காலமாகும்.

தமிழ் மக்களது உரிமைகளுக்காகப் போராடிய காலங்களில் சிவராம் எனும் பத்திரிகையாளர் என்னைச் சந்தித்து உங்களது போராட்டம் சர்வதேச மட்டத்தில் தெரியப்படவேண்டும் என்றும் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பேசப்பட வேண்டும் என்றும் இதற்காக தமிழ் மக்கள் சார்பில் கட்சி ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்றும் கூறினார். இவரது இந்த யோசனை குறித்து நான் பல தடவைகள் தலைவர் பிரபாகரனிடம் எடுத்துக் கூறியும் அவர் அதற்கு ஒத்துழைக்கவில்லை. எனது வேண்டுகோளுக்கு இணங்கவே இறுதியில் தலைவர் ஒத்துழைத்தார். அவ்வாறு எங்களால் உருவாக்கப்பட்ட கட்சி தான் இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அன்று எங்களால் ஒரு கொள்கைக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொள்கைகள் அற்றுப்போயுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது.

குறிப்பாக கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 11 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட கூட்டமைப்பு 7 ஆசனங்களை மட்டும் பெற்ற முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சுப் பதவியை விட்டுக்கொடுத்தது. இதனால் தமிழ் மக்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் புறந்தள்ளப்பட்டனர். ஆனால் பிள்ளையான் முதலமைச்சராக இருந்த காலங்களில் எந்த இனத்தையும் இரண்டாம் பட்சமாகப் பார்க்கவில்லை.

இன்று அரசில் உரிமையுள்ள மக்களாகத் தமிழ் மக்கள் மாறியுள்ளனர்.

தமிழர்களது உரிமைகளைத் தக்க வைக்கவேண்டும் என்பதை ராஜபக்ஷ நன்கு அறிந்தவர். 13 அம்ச கோரிக்கைகளுடன் சஜித் பிரேமதாஸவிடம் சென்ற சம்பந்தன் ஐயாவின் அந்த கோரிக்கைகளை சஜித் தூக்கி எறிந்ததன் பின்னர் 3 நாள்கள் மௌனமாயிருந்த சம்பந்தன் ஐயா, பிறகு தமிழ் மக்கள் சஜித்தை ஆதரிக்க வேண்டும் என்றார். அதற்கான காரணம் சம்பந்தன் ஐயா சஜித்திடம் பணம் பெற்றுவிட்டார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த முஸ்லிம் கட்சிகள் பொதுத் தேர்தல் முடிந்த கையோடு பொதுஜன பெரமுனவை ஆதரித்து அவர்களுடன் இணைந்து விடுவார்கள். சாதாரண முஸ்லிம் மக்கள் தங்களை இந்த முஸ்லிம் தலைமைகள் நடுக்கடலில் தள்ளிவிட்டன என்று திட்டும் சூழ்நிலை உருவாகிவிட்டது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ், பிரபாகரன் வழியில் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்று கூறுகின்றார்.அவர் பிரபாகரன் வழியில் இன்று தான் அ,ஆ,இ கற்கின்றார். ஆனால் நாங்கள் அவர் வழியில் பட்டம் முடித்தவர்கள் என்று கூற விரும்புகின்றேன்.

தற்போதைய காலத்தில் அதிகாரம்தான் சண்டித்தனமாக உள்ளது. இதைப் பெற்று தரும் மக்களாக கல்முனை மக்கள் மாறவேண்டும். தமிழர்களது வாக்களிப்பு வீதம் அதிகரிக்கப்பட வேண்டும் . ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானது. அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அம்பாறை மாவட்டத்தில் மாபெரும் கட்சி மாநாடு ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அனைத்து தமிழர் சிறு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இந்த முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது ஆதரவை வழங்க வேண்டும். அப்போது தான் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நிச்சயம் தரம் உயர்த்தப்படும் – என்றார்.

இந்த நிகழ்வில் சரீரம் நிறுவனத்தின் ஸ்தாபகரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினருமான லோகேஸ்வரன், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கொள்கை பரப்புச் செயலாளர் கே.நவேந்திரன் ,தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவர் விக்னேஸ்வரன், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினர் கு.ஏகாம்பரம் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# புதையல் தோண்டிக் கைதாகிய மாணவன் சிறையில் இருந்து பரீட்சை எழுத அனுமதி

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் சகோதரர்களுடன் இணைந்து வீட்டில் புதையல் தோண்டினார் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவன் சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதுவதற்கு வவுனியா பதில் நீதவான் ஆருரன் அனுமதி வழங்கியுள்ளார்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புதையல் தோண்டினார் என மூன்று சகோதரர்களை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்திருந்தனர். அதில் ஒருவர் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயது மாணவன்.

இந்த மூவரையும் வவுனியா பதில் நீதிவான் ஆருரனின் இல்லத்தில் முற்படுத்தியபோது அந்த மாணவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மாணவன் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளமையால் அவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு பதில் நீதவானிடம் கோரினார். இந்த வழக்கைக் கவனத்தில எடுத்த பதில் நீதிவான் பிணை விண்ணப்பத்தை நிராகரித்தமையுடன், சிறைச்சாலையில் இருந்து பாடசாலைக்குச் சென்று பரீட்சை எழுத அனுமதி வழங்கினார்.

அதனடிப்படையில் அந்த மாணவன் நேற்றுப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளான். (ஐ – 100)

# ராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஐ தொடும்

கொழும்பு, டிசெ. 03

மேலும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி. ஏக்கநாயக்க ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

தற்போது, கோட்டாபய தலைமையிலான அரசில் 15 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், 38 இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி அமைச்சர்களின் எண்ணிக்கை 53 ஆகும்.

19 வது திருத்தத்தின் 46 (1) வது பிரிவின்படி, மொத்தம் 70 அமைச்சர்களை நியமிக்க முடியும், இதில் 30 அமைச்சர்கள் மற்றும் 40 இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# முல்லைத்தீவு ஒதியமலைப் படுகொலை: 35 ஆவது வருட நினைவுதினம் அனுஷ்டிப்பு







முல்லைத்தீவு, டிசெ. 03

முல்லைத்தீவு மாவட்டம் ஒதியமலை கிராமத்தில் 1984.12.02 அன்று இராணுவச் சீருடை தரித்தவர்களால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் நினைவு தினம் நேற்று ஒதியமலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒதியமலை வாசிகசாலையில் அமைக்கப்பட்டுள்ள அவர்களது நினைவுத்தூபி முன்பாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் தீபம் ஏற்றியும், மலர்மாலை அணிவித்தும், மலர் தூவியும் தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், க.சிவனேசன், புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளர் , வவுனியா வடக்கு பிரதேச சபைத் தலைவர் தணிகாசலம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் , அவ்வூர் மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ)



# கடத்தப்பட்டு காணாமலாக்கபட்ட 52 பேரின் நினைவு வவுனியாவில்









வவுனியா, டிசெ. 03

வவுனியா – செட்டிக்குளம் பகுதியில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட 52 பேரின், 35 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு செட்டிகுளம் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை நடந்தது. செட்டிகுளம் பிரதேசபை மற்றும் பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், உயிரிழந்தவர் களுக்கு இந்து மற்றும் கிறிஸ்தவ மத குருமார்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதுடன் 52 பேர் நினைவாகச் சுடர் ஏற்றப்பட்டுமலர்தூவிஅஞ்சலிசெய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மதகுருமார்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், செட்டிக்குளம் பிரதேசசபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் இந்த நினைவு நாளைச் செட்டிக்குளம் பகுதியில் துக்கதினமாக அனுஷ்டிப்பதுடன் நினைவுத் தூபி ஒன்றையும் அமைக்கவுள்ளதாகச் செட்டிக்குளம் பிரதேச சபையின் தவிசாளர் ஆ.அந்தோணி இதன்போது தெரிவித்தார்.

கடந்த 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி வவுனியா செட்டிக்குளம் பகுதியில் 52 பேர் கடத்தப்பட்டு, காணாமலாக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறை நகர சபையின் பட்ஜெட் நேற்றுத் தோற்கடிப்பு

## முன்னணி, ஈ.பி.டி.பி. எதிராக வாக்களிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 03

பருத்தித்துறை நகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைத் தவிசாளர் ஜோசப் இருதயராசா நேற்று சபையில் முன்மொழிந்தார்.

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேச்சைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகியவற்றைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதனால் மேலதிக ஒரு வாக்கால் 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, நகர சபைத் தவிசாளருக்கு உள்ள அதிகாரத்தின் படி 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ -07)

# அனர்த்த நிலைமைகளை ஆராய்ந்து நிவாரணம் வழங்க கோட்டா பணிப்பு

கொழும்பு, டிசெ. 03

நாட்டின் பல மாவட்டங்களில் நில வும் அனர்த்த நிலைமையை ஆராய்ந்து நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சீரற்ற வானிலை காரணமாக தற்போது நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு, மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த நிலைமைகளின்போது பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்களது நலன்புரித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும்தாமதமின்றி மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியினால் அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக ஏற்படக்கூடிய மண்சரிவு, மண்மேடுகள் சரிந்து வீழ்தல், கற்பாறைகள் சரிந்து வீழ்தல் போன்ற அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியன ஒன்றிணைந்து அனர்த்த நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேவையான சூழலை ஏற்படுத்தவும் பொதுமக்களுக்கான நலன்புரி தேவைகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அனைத்துச் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மீளாய்வு ஆகியன பிரதமரின் தலைமையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2019 இல் வெளியிடப்பெற்றது.